கொள்கிறேன். ஆகவே இந்த விளக்கத்திற்குப் பின் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை அனுமதித்து விவாதித்திட எவ்வித முக்கியத் துவமும் இருந்திடவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அவசியமில்லை என்று கருதுகிறேன், அதனால் இந்தப் பிரேரணைக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்

THIRU K. M. SUBRAMANIAN: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Education and Local Administraton to a matter of urgent public importance. Sir, as regards the limitation of admission to the Teachers' Training Schools, particularly in the case of secondary trained teachers; the Government have now, I understand, prescribed that 300 . . .

MR. SPEAKER: The hon. Member has to read what he has given notice of.

THIRU K. M. SUBRAMANIAN: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the hardships caused on account of the instructions issued by the Government to drastically cut down the admission to Teachers' Training Schools, particularly to Secondary Training Course.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாகவே இருப்பதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க அதிக இடங்கள் ஒதுக்கவேண்டிய அவசியம் தற்சமயம் இல்லை. திட்ட காலத்திற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு தேவைப்படும் என்பது ஆராயப்பட்டுள்ளது. தற்சமயம் இருக்கும் பயிற்சிப் பள்ளிகளே போதும் எனக் கருதப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் பயிற்சிப் பள்ளிகளில் அவசியம் ஏற்பட்டால் அப்பள்ளிகளில் ஒவ்வொரு பிரிவிலும் 40 மாணவர்களுக்குப் பதில் 50 வரை சேர்க்க அனுமதிக்கப்படுகிறார்கள், ஒவ்வொரு வருடமும் மாவட்டவாரியாக எவ்வளவு பிரிவுகள், எவ்வளவு பயிற்சிப் பள்ளிகளில் தேவைப்படும் என ஆராய்ந்து மாநில மட்டத்தில் எவ்வளவு பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளனவோ, அந்த அளவை மீறாமல், பிரிவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

1970–71-ல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 199 பிரிவுகள் இருந்தன. இந்த ஆண்டு 160 பிரிவுகள் போதுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAN : In view of the fact that there is a very huge number of students according to the teacher-student ratio, and there is considerable unemployment in this country and in view of the fact that ladies are more fit to undertake the teaching profession, is it possible for the Hon. Minister to reconsider the matter and increase the strength of the trainees in the training course at least women training teachers to the 1970-71 level ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது பயிற்சி பெற்று வேலையில்லாமல் பல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் இருக்கிறார்கள். இன்னும் 2, 3 ஆண்டுகளில் அவர்களைக் கணக்கிட்டு எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்று பார்த்து, பயிற்சிப் பள்ளிகளில் பிரிவுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டமான முறையில் ஆசிரியர்களைச் சேர்ப்பது பற்றியோ, ஆசிரியைகளைச் சேர்ப்பது பற்றியோ ஒன்றும் சொல்வதற்கில்லை. அதில் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இது பற்றி பல கேள்விகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து அதிகமாக வந்து கொண்டேயிருக்கிறார்கள். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு வேலைவாய்ப்புக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் ஆசிரியைகளுக்கு அதிக ஊக்கம் தரவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, தற்போது திட்டவட்டமான எண்ணிக்கை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. தேவையான அளவுக்கு அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. கே. என். குமாரசாமி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் இல்லாத காரணத்தால் திரும்பப்பெற்றதாகக் கருதப் படுகிறது.

(4) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து-வாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.